www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

- ※ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- ※ மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
- ※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
- ※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..............................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினாத்தாள் I | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு இல. |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

**1.** பின்வருவனவற்றுள் விருப்பங்களின் குணாம்சங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ள கூற்று எது?
(1) வரையறுக்கப்படாதது, பலவகைப்பட்டது, பொதுவானது.
(2) வணிகர்களால் உருவாக்கப்படக்கூடியது, பொதுவானது, வரையறுக்கப்பட்டது.
(3) மனதில் தோன்றுவது, வரையறுக்கப்பட்டது, பலவகைப்பட்டது.
(4) வரையறுக்கப்படாதது, பலவகைப்பட்டது, மனதில் தோன்றுவது.
(5) பொதுவானது, வணிகர்களால் உருவாக்கப்படக்கூடியது, பலவகைப்பட்டது. (......)

**2.** பின்வருவன வித்தியாசமான பொருளாதாரத் துறைகள் தொடர்புடைய சில வணிக நடவடிக்கைகள் ஆகும். இவற்றுள் சேவைத் துறையுடன் தொடர்புடைய வணிக நடவடிக்கைகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) குடிசைக் கைத்தொழில் மற்றும் இறக்குமதி வியாபாரம்
(2) கறுவாவை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப்பொருள் செயன்முறையாக்கம் மற்றும் போக்குவரத்து
(3) கட்டட நிர்மாணம் மற்றும் வாயு
(4) போக்குவரத்து மற்றும் மீன்பிடி
(5) தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து (......)

**3.** பின்வரும் சோடிப் பதங்களுள், நாடப்பெறாப் பண்டங்கள் தொடர்பான சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) ஆயுட் காப்புறுதி மற்றும் தனிநபர் விபத்துக் காப்புறுதி
(2) மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதி
(3) தனிநபர் விபத்துக் காப்புறுதி மற்றும் வீடு
(4) புதினப் பத்திரிகை மற்றும் மோட்டார் வாகனம்
(5) வீடு மற்றும் தீக்காப்புறுதி (......)

**4.** பின்வரும் அட்டவணையானது தனியுடைமை வியாபார நடவடிக்கைகள் மீது தாக்கம் செலுத்தும் சில உள்ளக விசைகளையும் பலங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| உள்ளக விசைகள் | பலங்கள் |
|---|---|
| A. நிறுவனக் கட்டமைப்பு | 1. அனுபவம் |
| B. உடைமையாளர் | 2. இற்றைவரைத்தன்மை கொண்டிருத்தல் |
| C. ஊழியர்கள் | 3. நன்மதிப்பு |
| D. பாவனையிலுள்ள வளங்கள் | 4. இலகு தீர்மானம் எடுத்தல் |

மேலே தரப்பட்ட அட்டவணையை கருத்திற் கொண்டு, உள்ளக விசைகளுக்கும் பலங்களுக்கும் மிகவும் பொருந்தக்கூடிய சரியான தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A - 1, B - 2, C - 4, D - 3
(2) A - 4, B - 2, C - 3, D - 1
(3) A - 4, B - 3, C - 1, D - 2
(4) A - 3, B - 4, C - 2, D - 1
(5) A - 2, B - 1, C - 3, D - 4 (......)

**5.** பின்வரும் அட்டவணையில் **X** மற்றும் **Y** நிரல்களானது முறையே நிறுவனம் ஒன்றின் பணிச் சூழலின் இரண்டு விசைகளையும் நிறுவனமொன்றின் வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றிய பட்டியலையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. பிரதியீட்டு பண்டங்களின் உற்பத்தியாளர்கள் | 1. கைத்தொழிலில் உற்பத்திப்பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தல் |
| B. கைத்தொழிலின் போட்டி | 2. பண்டப் பெயர் தொடர்பில் வாடிக்கையாளர்கள் கூடியளவு அக்கறை காட்டல் |
| | 3. நுண்ணறிவுச் சொத்துக்களின் உரிமை தொடர்பான சட்டம் தளர்த்தப்படல் |
| | 4. சந்தையிலிருந்து வெளியேறுவதற்கான தடைகள் காணப்படல் |

இரண்டு பணிச்சூழல் விசைகளுடனும் வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்குப் பொருந்தும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) A - 2, 4 / B - 1, 3
(2) A - 2, 3 / B - 1, 4
(3) A - 1, 4 / B - 2, 3
(4) A - 1, 2 / B - 3, 4
(5) A - 3, 4 / B - 1, 2 (......)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



6. பின்வருவன நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சில முக்கியமான விடயங்கள் ஆகும்.
   A - நியாயமான பணப்பெறுமதியில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான ஆற்றல்
   B - வியாபார நெறிமுறையற்ற நடவடிக்கைகளுக்கெதிராக சட்டரீதியான பாதுகாப்பைப் பெறுவதற்கான ஆற்றல்
   C - வாடிக்கையாளர் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஆற்றல்
   D - இலாபத்தை உச்சப்படுத்துவதற்கான ஆற்றல்
   E - நன்மதிப்பை உயர்த்துவதற்கான ஆற்றல்
   F - பொருட்களின் எதிர்பார்க்கப்பட்ட நியமங்களையும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்கான ஆற்றல்

   மேலே தரப்பட்டவற்றுள் வாடிக்கையாளர்களுக்கு மட்டும் பொருந்தக்கூடிய சரியான இணைப்பைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
   (1) A, B, E (2) A, B, F (3) A, C, D (4) C, D, E (5) C, D, F (……)

7. பின்வருவனவற்றுள் நுகர்வோர் பாதுகாப்பு விவகாரத்தில் **சம்பந்தப்படாத** நிறுவகத்தைத் தெரிவுசெய்க.
   (1) இலங்கை தர கட்டளைகள் நிறுவகம்
   (2) தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
   (3) உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
   (4) அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்
   (5) நுகர்வோர் விவகார அதிகார சபை (……)

8. பின்வருவனவற்றிலிருந்து 1890 ஆம் ஆண்டுப் பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் பங்குடைமைக்குப் **பொருத்தமற்ற** நிபந்தனையைத் தெரிவுசெய்க.
   (1) வங்கி வட்டிக்குச் சமமானதாக மூலதனத்தின் மீதான வட்டியைப் பெறுவதற்கான உரிமை
   (2) பங்காளர்களிடையே இலாப நட்டங்களைச் சமமாக பங்கீடு செய்தல்
   (3) சகல பங்காளர்களினதும் அனுமதியுடன் புதிய பங்காளரைச் சேர்த்தல்
   (4) வணிகம் தொடர்பில் தனிப்பட்ட முறையில் பங்காளர்கள் செய்த செலவுகளை வணிகம் செலுத்த வேண்டும்.
   (5) பங்காளர்கள் வணிகத்துக்கு வழங்கிய சேவைக்காக சம்பளம் பெறுவதற்கு உரிமை இல்லை. (……)

9. பின்வருவனவற்றுள் வரையறுத்த பொதுக்கம்பனி (PLC) ஒன்றின் குணாம்சங்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
   (1) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாததும் பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்படுவதும்
   (2) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதும் பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்படாததும்
   (3) ஆகக்குறைந்த அங்கத்துவம் ஒன்று என்பதுடன் ஆகக்கூடியது ஐம்பது
   (4) ஆகக்குறைந்த பணிப்பாளர்கள் எண்ணிக்கை ஒன்று என்பதுடன் ஆகக்கூடியது வரையறையற்றது
   (5) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதும் பங்குப் பரிமாற்றகத்தில் பதிவுசெய்யப்பட்டதும் (……)

10. பின்வருவனவற்றுள் எது நபர் ஒருவர் கம்பனி ஒன்றின் பணிப்பாளராக வருவதற்கான **தகுதியீனத்தை** ஏற்படுத்தக்கூடியது?
   (1) அக்கம்பனியில் பங்குதாரராக இருத்தல்
   (2) இரட்டைப் பிரஜாவுரிமையினைக் கொண்டுள்ளவராக இருத்தல்
   (3) கடன் தீர்க்கும் ஆற்றலற்ற (வங்குரோத்து) நிலையை அடையாதவராக இருத்தல்
   (4) வேறொரு கம்பனியின் பணிப்பாளர் பதவியைக் கொண்டுள்ளவராக இருத்தல்
   (5) தனது சம்மதத்தை வழங்காதவராக இருத்தல் (……)

11. பின்வருவன வணிகம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பிலான சில ஆரம்ப படிமுறைகள் ஆகும். இவற்றுள் சிற்றளவு வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முதலாவது படிமுறை எது?
   (1) மூலதனத்தைக் கண்டறிதல் (2) ஒரு சந்தை அளவையாய்வை (Survey) மேற்கொள்ளல்
   (3) ஒரு வணிக எண்ணத்தை உருவாக்குதல் (4) வணிகத்துக்கான இட அமைவைக் கண்டறிதல்
   (5) வணிகத்தைப் பதிவு செய்தல் (……)

12. பின்வரும் அட்டவணையானது முயற்சியாளர் ஒருவர் வணிகம் ஒன்றைத் தொடங்குவதில் செல்வாக்குச் செலுத்தும் சில காரணிகள் மற்றும் உதாரணங்களை எடுத்துக் காட்டுகின்றது.

| காரணிகள் | உதாரணங்கள் |
|---|---|
| A. தனிப்பட்ட பின்னணிக் காரணிகள் | 1. வணிகக் குடும்பத்திலிருந்து பெறப்பட்டவை |
| B. சமூகக் காரணிகள் | 2. சுய நம்பிக்கை |
| C. முயற்சியாண்மைக் காரணிகள் | 3. வேலைவாய்ப்பின்மை |

   காரணிகள் மற்றும் உதாரணங்கள் தொடர்பில் சரியாகப் பொருந்துகின்ற தொகுதியைத் தெரிவுசெய்க.
   (1) A - 1, B - 2, C - 3 (2) A - 2, B - 1, C - 3 (3) A - 1, B - 3, C - 2
   (4) A - 3, B - 2, C - 1 (5) A - 2, B - 3, C - 1 (……)

13. நாடுகளையும் நாணயங்களையும் கொண்ட பட்டியல் ஒன்று கீழே தரப்படுகின்றது.

| நாடு | நாணயம் |
|---|---|
| A. இத்தாலி | 1. வொன் |
| B. அவுஸ்திரேலியா | 2. டொலர் |
| C. தென் கொரியா | 3. றிங்கிற் |
| D. மலேசியா | 4. யூரோ |

   நாடு மற்றும் அதன் நாணயம் தொடர்பில் சரியாகப் பொருந்துகின்ற தொகுதியைத் தெரிவுசெய்க.
   (1) A - 1, B - 2, C - 3, D - 4 (2) A - 2, B - 1, C - 3, D - 4 (3) A - 3, B - 2, C - 1, D - 4
   (4) A - 4, B - 2, C - 1, D - 3 (5) A - 4, B - 2, C - 3, D - 1 (……)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

**14.** இலங்கை மத்திய வங்கியின் சில தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

A - நிதிக் கொள்கைகளைப் பேணுதல்
B - அரச கடனை முகாமை செய்தல்
C - அந்நியச் செலாவணியைக் கட்டுப்படுத்துதல்
D - அரசாங்கத்தின் பொருளாதார அறிவுரைஞராகத் தொழிற்படுதல்
E - ஊழியர் சேமலாப நிதியத்தை முகாமை செய்தல்
F - பிராந்திய அபிவிருத்திக்காக நுண் நிதி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களைக் கூட்டிணைத்தல்

மேலே தரப்பட்ட தொழிற்பாடுகளுள் இலங்கை மத்திய வங்கியின் நிறுவக முகவராண்மைத் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C, D (2) A, B, D, F (3) A, B, E, F (4) B, C, D, E (5) B, C, E, F (……)

**15.** காப்புறுதித் தத்துவங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A - இழப்பீடு B - பதிலாள் வைப்பு C - பங்களிப்பு D - மிக்குயர் நன்நம்பிக்கை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஆயுட்காப்புறுதிக்குப் பொருந்தக்கூடிய தத்துவத்தைத் தெரிவுசெய்க.

(1) A (2) B (3) C (4) D (5) இவற்றுள் எதுவுமில்லை. (……)

**16.** காப்புறுதி செய்யத்தக்க இடர்கள் மற்றும் காப்புறுதி செய்யத்தகாத இடர்கள் சில கீழே தரப்படுகின்றன.

A - மோட்டார் வாகனங்களின் தேய்வு
B - ஒரு பாடகரின் குரல்
C - இறப்பு
D - வயதாதல்
E - ஊழியர் விலகிச்செல்லல்

மேலே தரப்பட்டவற்றுள் காப்புறுதி **செய்யத்தகாத** இடர்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E (4) A, C, D, E (5) B, C, D, E (……)

**17.** பின்வரும் காரணிகளுள் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத் தடைகள் தொடர்பான இயற்கைக் காரணி எதுவாகும்?

(1) ஏற்றுமதி இறக்குமதி வரையறைகள்
(2) உயர்ந்த இறுப்புக்கள் (Tarriffs)
(3) கலாசார வேறுபாடுகள்
(4) இறுக்கமான நாணயமாற்றுக் கொள்கைகள்
(5) வியாபார உடன்படிக்கைகள் (……)

**18.** இலத்திரனியல் வியாபாரம் (e-trade) தொடர்பான பின்வரும் அனுகூலங்களுள் வணிகத்துக்கு மட்டும் பொருந்தக்கூடிய அனுகூலம் எது?

(1) கொடுக்கல்வாங்கல்கள் விரைவுபடுதல்
(2) சந்தைப் பங்கு விரிவாகுதல்
(3) போக்குவரத்தின் இலகுதன்மை
(4) சந்தைத் தகவல்களின் தாராளத்தன்மை
(5) ஒப்பீட்டளவில் பொருட்களுக்கான குறைந்த விலை மட்டம் (……)

**19.** நிறுவனமொன்றின் முகாமைசார் மட்டம் சார்ந்த பதவிநிலைகள் சில கீழே தரப்படுகின்றன.

A - மேற்பார்வையாளர்
B - சந்தைப்படுத்தல் முகாமையாளர்
C - நிதி முகாமையாளர்
D - பிரதம நிறைவேற்று அதிகாரி
E - ஆய்வு அபிவிருத்தி முகாமையாளர்
F - நலன்புரி அலுவலர்
G - மனித வள முகாமையாளர்
H - வேலைப் பணிப்பாளர் (Working Director)
I - உற்பத்தி முகாமையாளர்
J - முகாரி (Foreman)

மேலே தரப்பட்டவற்றுள் நடுத்தர முகாமைத்துவ மட்ட பதவிநிலைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?

(1) A, B, C, F, G (2) A, D, F, H, J (3) B, C, D, E, G (4) B, C, E, F, H (5) B, C, E, G, I (……)

**20.** ஊழியர்களை ஊக்குவிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய சில முறைகள் கீழே தரப்படுகின்றன.

A - வீடமைப்புக் கடன்கள்
B - ஊழியர் பயிற்சி
C - அதிகாரப் பன்முகப்படுத்தல்
D - ஊழியர் காப்புறுதி
E - உற்பத்திக்கான தூண்டுதலளிப்புக்கள்
F - அங்கீகாரக் கடிதம்
G - பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள்
H - வருகைக்கான தூண்டுதலளிப்புக்கள்

நிதி சார் ஊக்குவிப்பு முறைகளை உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க

(1) A, B, C, D, E (2) A, C, D, F, G (3) A, D, E, G, H (4) B, C, E, G, H (5) B, D, E, G, H (……)

**21.** கீழே தரப்பட்டுள்ளவற்றுள் செயற்பாட்டு முகாமைத்துவத்திற்குப் **பொருத்தமற்ற** தொழிற்பாட்டைத் தெரிவுசெய்க.

(1) திரும்பிவரும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல்
(2) உற்பத்திப்பொருட்களை வடிவமைத்தல்
(3) மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல்
(4) தரக் கட்டுப்பாடு
(5) ஆய்வு மற்றும் அபிவிருத்தி (……)

**22.** உற்பத்தி நிறுவனமொன்றின் சில செலவீனங்கள் கீழே தரப்படுகின்றன.

A - ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளங்கள்
B - தொழிற்சாலை காப்புறுதிக் கட்டணங்கள்
C - மூலப்பொருட்களின் கொள்வனவு
D - விற்பனைத் தரகுகள்
E - வெற்றுப் போத்தல்களைக் கொள்வனவு செய்தல்
F - வரிக் கட்டணங்கள் (Rates)
G - துண்டு வீத அடிப்படையிலான ஊழியர் கூலிகள்
H - உற்பத்தி அலகுகள் மீதான தனியுரிமைக் கட்டணங்கள் (Royalty)

இவற்றுள் மாறும் செலவுகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C, D, E (2) A, B, F, G, H (3) B, E, F, G, H (4) C, D, E, F, G (5) C, D, E, G, H (……)

**23.** பின்வருவனவற்றுள் விசேடமாக சேவைச் சந்தைப்படுத்தலின் மாறிகளை உள்ளடக்கியுள்ள சரியான விடை எது?

(1) உபசரிப்பாளர் (Waiter), விளம்பரப்படுத்தல், உதவுதொகைகள் (allowances)
(2) நேரடி விற்பனையாளர், கழிவுகள், பண்டக்குறிகள்
(3) வைத்தியர், தன்னியக்கமான சேவைச் செயன்முறைகள், Wi-Fi
(4) மேற்பார்வையாளர், இருப்புக்கள், தரம்
(5) போக்குவரத்து, பொதி செய்தல், Wi-Fi (……)

agaram.lk

[பக். 4 ஐப் பார்க்க

www.agaram.lk



14899

**24.** பின்வரும் சந்தைப்படுத்தல் விளைவுகளில் இருந்து வாடிக்கையாளர்களுக்கு மட்டும் முக்கியமான தொகுதியைத் தெரிவுசெய்க.
A - உடைமையாளர்கள் மற்றும் ஊழியர்களின் திருப்தியை அதிகரித்தல்
B - உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளின் எல்லைகள் விரிவாக்கப்படல்
C - சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகள் தாராளமயமாதல்
D - வருமான சமமின்மை குறைதல்
E - சந்தை மீதான அறிவு விரிவடைதல்
F - பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பிலான கொள்வனவு இலகுவாதல்
(1) A, B, D (2) B, E, F (3) C, D, F (4) C, E, F (5) D, E, F (……)

**25.** பின்வருவனவற்றுள் எதனை ஒரு தொழில் தருநரின் உரிமையாகக் கருத முடியும்?
(1) நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்வதனை நோக்கியதாக வேலை செய்தல்
(2) வேலைத்தளத்தில் மிகவும் நாகரீகமாக நடந்து கொள்ளுதல்
(3) சேவை உடன்படிக்கையில் இணங்கிக்கொண்டதன் பிரகாரம் வேலை செய்வித்தல்
(4) சம்பளப் பெறுமதிக்குச் சமமானதான சேவையை வழங்குதல்
(5) சேவை உடன்படிக்கைக்கு அமைவாக கடமைகளை நிறைவேற்றுதல் (……)

**26.** நிரந்தரப் பணிநிலையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஊழியர் ஒருவர் அவரது பதவிநிலையில் ஊர்ஜிதப்படுத்தப்படுவதற்கு முன்னர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
(1) அமைய ஊழியர் என (2) தற்காலிக ஊழியர் என (3) பதிலீட்டு ஊழியர் என
(4) தகுதிகாண் ஊழியர் என (5) ஒப்பந்த ஊழியர் என (……)

**27.** பின்வருவன நிறுவனமொன்றின் பல்வேறு வகையான கணினிமயப்படுத்தப்பட்ட முகாமைத்துவ தகவல் உப முறைமைகள் ஆகும்.
A - கொள்வனவுகளின் திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல் B - செயன்முறை மற்றும் இயந்திரங்களின் கட்டுப்படுத்தல்
C - கணக்கீட்டு முறைமை D - ஊழியர் சம்பள முறைமை
E - கணினி உதவியுடனான வடிவமைப்பு F - ஊழியர் வருகை
செயற்பாட்டு தகவல் முறைமைக்கு மட்டும் பொருந்தக்கூடியதான உப முறைமைகளை உள்ளடக்கியுள்ள தொகுதியை தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, E (3) A, D, F (4) B, C, F (5) D, E, F (……)

**28.** தனியுடைமை வியாபாரத்தின் வெற்றியை அளவிடுவதற்குப் பயன்படுத்த **முடியாத** ஒரு நியதி,
(1) உற்பத்திப்பொருள் அல்லது சேவைகளின் தரம் (2) நிதிச் செயற்றிறன்
(3) உடைமையாளரின் கல்வி மட்டம் (4) உடைமையாளரின் முயற்சியாண்மைத் தேர்ச்சிகள்
(5) ஊழியர்களின் எண்ணிக்கை (……)

**29.** மதிப்பிடப்பட்ட செயற்றிட்ட கிரய அட்டவணை ஒன்றில் **உள்ளடக்கப்படாத** ஒரு உருப்படி,
(1) காணிகள் மற்றும் கட்டடங்களின் கிரயம் (2) வணிகத்தின் ஆரம்பக் கிரயம்
(3) நன்மதிப்பு (4) கடன் தவணைகளுக்கான பணக் கொடுப்பனவுகள்
(5) நிர்வாகச் செலவுகள் (……)

**30.** பின்வருவனவற்றுள் நிதித் திட்டம் ஒன்றில் **உள்ளடக்கப்படாத** ஒரு உருப்படி,
(1) மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்று (2) கடன் மீள் கொடுப்பனவு அட்டவணை
(3) மூலதன தேவைப்பாடுகள் (4) மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல்
(5) ஊழியர் மரபுரிமைத் திட்டம் (Employee succession plan) (……)

- **31** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்குப் **பொருத்தமான சொற்களைப்** பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

**31.** (அ) பல்வேறுபட்ட அக்கறையுடைய தரப்பினருள், வணிகங்கள் தமது நிலைத்திருத்தலை உறுதிப்படுத்துவதற்காக ……………………………… மீது அக்கறை செலுத்துகின்ற அதேவேளை உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ……………………………………… இன் மீது அக்கறை காட்டுகின்றன.

(ஆ) வணிகமொன்றின் மைய விழுமியங்களின் முறைமை (Core values) ஒரு ……………………………… சூழல் காரணியாகக் காணப்படும் அதேவேளை தொழினுட்பம் ஒரு ……………………………… சூழல் காரணியாகக் காணப்படுகின்றது.

**32.** (அ) வரி வருமானங்களானது ……………………………………………… கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் மீண்டெழும் செலவுகள் ……………………………… கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

(ஆ) வணிக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் அரச பிணைப்பத்திரங்களைப் பிணையாக வைத்து அவற்றுக்கு ஈடாக மத்திய வங்கியிடமிருந்து நிதிகளைப் பெற்றுக் கொள்ளும்போது அறவிடப்படும் வட்டி வீதமானது ……………………………………………………………… என அழைக்கப்படுவதுடன் மத்திய வங்கியினால் தெரிவு செய்த துறைகளுக்கு வழங்கும் கடன் அளவை வரையறுப்பது ……………………………………………………… என அழைக்கப்படும்.

**33.** பங்குடைமை மற்றும் வரையறுத்த தனியார் கம்பனி ஆகியவற்றின் அடிப்படைக் குணாம்சங்களைக் கருத்திற் கொண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| நியதி | பங்குடைமை | வரையறுத்த தனியார் கம்பனி (Pvt) |
|---|---|---|
| 1. அங்கத்தவர் எண்ணிக்கை | 2 - 20 | ……………………………… |
| 2. நட்டப்பொறுப்பு | ……………………………… | வரையறுக்கப்பட்டது. |
| 3. ……………………………… | உடன்பாட்டின் பிரகாரம் | பங்குகள் |
| 4. முகாமை | பங்காளர்கள் | ……………………………… |

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

[பக். 5 ஐப் பார்க்க

www.agaram.lk



**34.** (அ) கம்பனி ஒன்றின் பங்குதாரராவதற்கு கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய **இரண்டு** நிபந்தனைக ........................................ உம் ........................................ உம் ஆகும்.

(ஆ) இலங்கையில் காணப்படும் அங்கீகார வணிகங்களுக்கான **இரண்டு** உதாரணங்கள் ........................................ உ ........................................ உம் ஆகும்.

**35.** நிறுவனமொன்றில் அவசர காலத்தில் வெளியேறுவதற்காக (Emergency Exit) அம்புக்குறியுடன் எடுத்துக் காட்டப்படும் அறிவித்த பலகையானது ஒரு ............................ என அழைக்கப்படுவதுடன் ............................ தொடர்பாடல் முறையாக கருதப்படுகின்ற அதேவேளை நிறுவனத்தால் வாடிக்கையாளருக்கு அனுப்பப்படும் கடிதமானது ............................ எ அழைக்கப்படுவதுடன் ............................ தொடர்பாடல் முறையாகக் கருதப்பட முடியும்.

**36.** (அ) பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது, ஏற்றுமதி செய்யப்படும் நாட்டினால் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்பதை அத்தாட்சிப்படுத்தி ஒரு அதிகாரபூர்வ நிறுவனத்தினால் வழங்கப்படும் ஆவணமானது ............................ ............................ என அழைக்கப்படும்.

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி செய்த நாட்டுக்குள்ளே சுங்கத்தின் மேற்பார்வையின் கீழ் பெறும சேர்க்கப்பட்ட பின்னர் அப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுதல் ............................ என அழைக்கப்படு

**37.** (அ) ஊக்குவித்தலின் பிரதான சிறப்பம்சம் ஊழியர்களின் ............................ பங்களிப்பாகும்.

(ஆ) நிறுவனமொன்றில் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** வகையான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைகள் ............................ உம் ............................ உம் ஆகும்.

**38.** உற்பத்தி முறைகளின் வகைப்படுத்தலைக் கருத்திற் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| நியதி | வேலை உற்பத்தி | பாய்ச்சல் உற்பத்தி |
|---|---|---|
| 1. வெளியீட்டின் அளவு | ............................ | ............................ |
| 2. ............................ | ............................ | ஒரு தனி உற்பத்திப்பொருள் |

**39.** (அ) உற்பத்திச் செயன்முறையை ஒரே கட்டத்தில் பூரணப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் குறித்தவொ இடத்தில் மேற்கொள்ளக்கூடியவாறு வடிவமைக்கப்படும் ஒரு தள அமைப்பு (Lay out) ............................ என அழைக்கப்படுவதுடன் உற்பத்திச் செயன்முறையை தொடர்ச்சியாகப் பாயச் செய்வதற்காக வடிவமைக்கப்படும் த அமைப்பானது ............................ எனவும் அழைக்கப்படும்.

(ஆ) சிக்கனக் கட்டளைத் தொகையில் (EOQ) ............................ கிரயமும் ............................ ............................ கிரயமும் சமமானதாகக் காணப்படும்.

**40.** (அ) தற்போது கொழும்பு பங்குச் சந்தையில் பயன்படுத்தப்படும் **இரண்டு** விலைச்சுட்டெண்கள் ............................ ............................ உம் ............................ உம் ஆகும்.

(ஆ) வெளிநாட்டவர்கள் ............................ கணக்கின் ஊடாக கொழும்பு பங்குச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களி ஈடுபட முடிவதுடன் அவ்வாறான கணக்குகளை பேணும் வங்கிகள் ............................ என அழைக்கப்படும்.

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு **மிகப் பொருத்தமான** விடைகளை எழுதுக.

**41.** பொருளாதாரத்தில் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளை குறிப்பிடுக.

1. ........................................................................
2. ........................................................................
3. ........................................................................
4. ........................................................................

**42.** அலங்கார வெட்டுப் பூ வணிகமொன்றிற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** சேவைகளையும் அவ்வாற சேவைகளை வழங்கும் நிறுவகங்கள் **இரண்டையும்** தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடுக.

| சேவைகள் | நிறுவகங்கள் |
|---|---|
| 1. ............................ | ............................ |
| 2. ............................ | ............................ |

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

[பக். 6 ஐப் பார்

www.agaram.lk



**43.** சிற்றளவு வணிகங்களின் வெற்றிக்காக அரசாங்கத்தினால் அல்லது ஏனைய நிறுவகங்களால் வழங்கப்படும் **நான்கு** வகையான சேவைகளைத் தருக.

1. .................................... 2. ....................................

3. .................................... 4. ....................................

**44.** முகவர்களால் வழங்கப்படும் சேவைகளின் பிரகாரம் குறித்த முகவர்களையும் அவர்களால் அறவிடப்படும் கட்டணங்களையும் பின்வரும் அட்டவணையில் நிரப்புக.

| நடவடிக்கை | முகவர் | முகவர் கட்டணம் |
|---|---|---|
| 1 முதல்வர் சார்பாக கடன் விற்பனைகளுக்கான வருமதிகளை வசூலித்தல் | .................................... | .................................... |
| 2 முதல்வர் சார்பாக உயர்வான விலையைக் கோருவதற்காக விற்பனை நடவடிக்கைகளை வெளிப்படையாகவும் வாய்மொழி மூலமாகவும் கூட்டிணைத்தல் | .................................... | .................................... |

**45.** சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் முழுப்பெயரை எழுதுக.

1. CIF : ....................................
2. FOB : ....................................
3. L / C : ....................................
4. B / L : ....................................

**46.** (அ) ஒப்பந்த சேமிப்பு நிறுவகங்கள் **இரண்டு** தருக.

1. .................................... 2. ....................................

(ஆ) இலத்திரனியல் பணக்கைப்பையைப் (e-wallet) பயன்படுத்துவதன் **இரண்டு** அனுகூலங்களைத் தருக.

1. ....................................
2. ....................................

**47.** தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்குவதன் **நான்கு** பிரதான நோக்கங்களை எழுதுக.

1. ....................................
2. ....................................
3. ....................................
4. ....................................

**48.** தகவல் வகைப்படுத்தலின் **நான்கு** நியதிகளை எழுதுக.

1. .................................... 2. ....................................

3. .................................... 4. ....................................

**49.** அமைப்பு வரைபடம் ஒன்றுடன் காட்டப்படும் நிறுவனக் கட்டமைப்பின் குணாம்சங்கள் **நான்கைத்** தருக.

1. ....................................
2. ....................................
3. ....................................
4. ....................................

**50.** பின்வருவன பொதுவாக பொதிசெய்தலின்போது பயன்படுத்தப்படும் குறியீடுகள் (அடையாளங்கள்) ஆகும். அவை ஒவ்வொன்றினதும் கருத்தினை எழுதுக.

1.  ....................................

2.  ....................................

3.  ....................................

4.  ....................................

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

14899

AL/2015/32/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

வணிகக் கல்வி II
Business Studies II

32 T II

மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1. (i) வணிக நிறுவனங்கள், சமூக நிறுவன முறைமையின் ஒரு பகுதி ஆகும்.

(அ) சகல நிறுவனங்களும் பொதுவான குணாம்சங்களைக் கொண்டுள்ளன. முறைசார்ந்த வணிக நிறுவனமொன்றின் பொதுவான குணாம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(ஆ) "சமூகம் தொடர்ந்து இருப்பதற்கு வணிகங்கள் அவசியமானவை ஆகும்." வணிகங்கள் என்பதனை வரையறுத்து, இக்கருத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) வணிகம் ஒன்றின் வெற்றி அல்லது தோல்வியில் அதன் அக மற்றும் புறச் சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றது.

(அ) வணிகமொன்றின் அகச் சூழல் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அக்காரணிகள் வணிகத்தின் வெற்றியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை விளக்குக.

(ஆ) வணிகமொன்றின் பேரண்டச் சூழல் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அக்காரணிகள் வணிகத்தின் தோல்வியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் வணிகத் துறையில் சேவைகளை வழங்கும் பல நிறுவனங்கள் காணப்படுகின்றன.

(அ) வணிகத்தின் துணைச் சேவைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ஆ) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற **இரண்டு** சேவைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தற்காலத்தில் பல வணிகங்கள் பெரியளவிலான பணத்தொகையைச் செலவிடுகின்றன.

(அ) சமூகப் பொறுப்புகளைப் பூர்த்தி செய்வதனூடாக வணிகமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய **நான்கு** நன்மைகளை எழுதுக.

(ஆ) வணிக ஒழுக்கக்கோவை ஒன்றை உருவாக்குகையில் கருத்திற் கொள்ள வேண்டிய **இரண்டு** காரணிகளை உதாரணங்களுடன் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(v) யோகட் தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரான சமந்த என்பவர் அவரது உற்பத்திப்பொருளின் தரம் தொடர்பில் அதிகளவான வாடிக்கையாளர்களின் புகார்களைப் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து தனது உற்பத்திப்பொருளின் தரத்தை மேம்படுத்துவதற்காக மிகவும் தரம் வாய்ந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்தார். சமந்தவின் இத்தீர்மானமானது அவரது உற்பத்திப்பொருளின் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவுமா என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. (i) (அ) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்யக்கூடிய **நான்கு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(ஆ) நுகர்வோர் உரிமைகள் **இரண்டைப்** பெயரிட்டு, அத்தகைய உரிமைகளைப் பாதுகாப்பதில் வணிகர் ஒருவர் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) இலங்கையில் சில வணிகர்களால் மேற்கொள்ளப்படும் வியாபாரம் தொடர்பான நெறிமுறையற்ற செயல்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ஆ) அவ்வாறான நெறிமுறையற்ற செயல்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) அங்கீகார வணிகமொன்றிலிருந்து ஓர் பங்குடைமை எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விளக்குக.

(ஆ) தற்போது, இலங்கையில் அங்கீகார வணிகங்களைத் தாபிப்பதில் ஓர் அதிகரித்த போக்கு காணப்படுகின்றது. அங்கீகார வணிகத்திலிருந்து அங்கீகாரம் பெற்றவருக்குக் கிடைக்கக்கூடிய **நான்கு** அனுகூலங்களை விபரிக்குக. (04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(iv) (அ) இலங்கை அரசாங்கமானது உற்பத்தித்துறையிலும் பார்க்க சேவைத்துறை வணிகங்களில் ஈடுபடுவதற்கு முன்னுரிமை வழங்குகின்றது. அத்தகைய முன்னுரிமையில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக.

(ஆ) "தனது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அரசாங்கமானது வணிகத்துறையிடமிருந்து ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் அதேவேளை அவ்வாறான இலக்குகளை அடைவதற்கு வணிகத்துறையும் பல்வேறு வழிகளில் தமது பங்களிப்பை வழங்குகின்றது". உதாரணங்களைக் குறிப்பிட்டு, இக்கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக அரசாங்கமானது உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் போன்றவற்றின் மீது இறக்குமதித் தீர்வையை பிரேரித்திருக்கின்றது. இந்த இறக்குமதித் தீர்வையானது, உள்ளூர் விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் மீது எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** (i) (அ) முயற்சியாண்மை ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதொரு காரணியாகும். இக்கருத்தை **நான்கு** உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

(ஆ) சிறிபாலனின் தந்தை ஒரு வெற்றிகரமான வணிகராவார். சிறிபாலன் சில முயற்சியாண்மைத் திறன்களைக் கொண்டிருந்த போதிலும் முயற்சியாண்மைத் திறன்களை மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவரது தந்தை வலியுறுத்துவார். சிறிபாலனின் முயற்சியாண்மைத் திறன்களை மேம்படுத்துவதற்கான **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) உம்மிடம் இரண்டு மில்லியன் ரூபா பணம் இருக்குமாயின், நீர் அப்பணத்தை காணி ஒன்றை வாங்குவதிலா அல்லது பங்குச் சந்தையில் முதலீடு செய்வதிலா செலவிடுவீர்? **இரண்டு** தெரிவுகளையும் ஒப்பிட்டு உமது தீர்மானத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) பேரளவு வணிகங்களை ஆரம்பிப்பதிலும் பார்க்க ஏன் சிற்றளவு வணிகங்களை ஆரம்பிப்பதில் மக்கள் அதிகளவு ஆர்வம் காட்டுகின்றனர் என்பதற்கான **நான்கு** காரணங்களை விளக்குக.

(ஆ) கடுமையான போட்டி ஒன்றினை அனுபவிக்கும் ஒரு சிறிய அளவிலான சில்லறை வியாபாரி வாடிக்கையாளர்களைக் கவர்வதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** தந்திரோபாயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) காசோலைக்கான திகதி, தொகை (எழுத்திலும் இலக்கத்திலும்) மற்றும் கையொப்பம் ஆகியவற்றை காசோலையின் மீது சரியாக எழுதியிருந்த போதிலும் வங்கியின் ரெல்லர் இயந்திரமானது அக் காசோலைக்கான காசைச் செலுத்த மறுத்தது. இக்கொடுப்பனவைச் செலுத்த மறுத்ததற்கு சாத்தியமான **நான்கு** காரணங்களை எழுதுக.

(ஆ) வணிக வங்கிகள், வணிக நிறுவனங்களுக்குப் பல வகையான சேவைகளை வழங்குகின்றன. அவ்வாறான **நான்கு** சேவைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) "வணிக வங்கி ஒன்றிலிருந்து கூட்டுறவுக் கிராமிய வங்கி வேறுபடமாட்டாது." இக்கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) "தற்காலத்தில் இலங்கையில் நிதிக் கம்பனிகள் வேகமாக வளர்ந்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது." அவ்வாறு நிதிக்கம்பனிகள் வேகமாக வளர்ந்து செல்வதற்கான **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4.** (i) (அ) ஆயுட் காப்புறுதி மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதி என்பன தொடர்பில் நட்டஈட்டைக் கோரும்போது இவை ஒவ்வொன்றிலும் காப்புறுதி செய்வோர் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் **இரண்டு** வீதம் விளக்குக.

(ஆ) சந்திரசிறி என்பவர் ஒரு தொழில்சார் வாத்தியக் கலைஞரும் பாடகரும் ஆவார். இவர் உள்ளூர் இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக அடிக்கடி தனது சொந்த வாகனத்தில் பயணிக்கின்றார். அத்தோடு வெளிநாட்டு இசை நிகழ்ச்சிகளிலும் கூட பங்குபற்றுகின்றார். சந்திரசிறி முகங்கொடுக்கக்கூடிய **நான்கு** இடர்களைப் பெயரிட்டு, அவ்விடர்களை உள்ளடக்கக்கூடியவாறு அவர் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதிப் பத்திரங்களைக் (ஒப்பந்தங்களை) குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) அதிவேக நெடுஞ்சாலை வலைப்பின்னல் அபிவிருத்தியின் காரணமாக வணிகத்துறையில் ஏற்படக்கூடிய பல்வேறு மாற்றங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) முகாமையாளர் ஒருவர் தமது அலுவலர்களுக்கு விரிவுரை ஒன்றினை வழங்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய **நான்கு** அடிப்படைக் காரணிகளை எழுதுக.

(ஆ) இரு நபர்களுக்கிடையேயான இலத்திரனியல் தொடர்பாடலின் பயனுறுதித் தன்மையின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய **நான்கு** இடையூறுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) விநியோக வழிமுறையில் இருந்து மொத்த விற்பனையாளரை அகற்றுவதற்குச் 'சார்பாகவும்', 'எதிராகவும்' **இரண்டு** காரணங்கள் வீதம் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(v) (அ) பின்வரும் அட்டவணையானது விவசாய இரசாயன உற்பத்திப்பொருட்களை இறக்குமதி செய்யும் செயன்முறை தொடர்பான சில படிமுறைகளைக் காட்டுகிறது.

வெளிநாட்டு வழங்குனரின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளுதல்
↓
A
↓
B
↓
C
↓
கட்டளையிடுதல்
↓
D
↓
துறைமுகத்தில் இருந்து பொருட்களைச் சேகரித்தல்

**A, B, C, D** ஆகியவற்றிற்கான மேற்குறிப்பிட்டுள்ள செயன்முறையின் படிமுறைகளை உமது விடைத்தாளில் குறிப்பிடுக.

(ஆ) கடன் அட்டைக் (Credit card) கொடுக்கல்வாங்கல்களை இலகுவாகக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** வசதிகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

**5.** (i) முகாமையாளர் ஒருவரின் பின்வரும் ஒவ்வொரு வகிபாகத்துக்கும் ஓர் உதாரணம் வீதம் தருக.

(அ) தலைவர் (ஆ) தகவலளிப்பவர்

(இ) முயற்சியாண்மையாளர் (ஈ) வள ஒதுக்கீட்டாளர் (04 புள்ளிகள்)

(ii) "நிறுவனமொன்றின் வெற்றிக்கு தலைமைத்துவம் அத்தியாவசியமானதாகும்." இக்கருத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) தெரிவுசெய்யப்பட்ட வெதுப்பக (Bakery) உற்பத்திப்பொருளொன்றுக்கான உற்பத்திச் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறைக்குமான உதாரணங்களைக் கொண்டு அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) சிறிய வியாபாரிகளுக்கு இலாப நட்டமற்ற பகுப்பாய்வின் (Break even analysis) முக்கியத்துவம் பற்றிய ஒரு விரிவுரையை வழங்குகையில் அதன் முக்கியத்துவம் தொடர்பில் நீர் வலியுறுத்திக் கூறக்கூடிய **நான்கு** காரணிகளை எழுதுக.

(ஆ) "நியமங்கள் இன்றி வெற்றிகரமான கட்டுப்படுத்தற் செயன்முறையினை அமுல்படுத்த முடியாது." கட்டுப்படுத்தற் செயன்முறையினைக் கருத்திற் கொண்டு இக்கூற்றை நியாயப்படுத்துக. (04 புள்ளிகள்)

(v) இலாப நட்டமற்ற புள்ளியில் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை 4 000 ஆகும். ஒரு அலகுக்கான மாறும் கிரயம் ரூபா 10 ஆகும்.

(அ) ஒரு அலகின் விற்பனை விலை ரூபா 15 ஆயின், மொத்த நிலையான கிரயத்தைக் கணிக்குக.

(ஆ) ரூபா 10 000 ஐ இலாபமாக உழைப்பதற்கு விற்பனை செய்ய வேண்டிய மொத்த அலகுகளின் எண்ணிக்கையைக் கணிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (i) (அ) "ஒவ்வொரு சந்தைத் துண்டமும் பயனுறுதிமிக்கதாக அமைந்திருக்க மாட்டாது" ஒரு பயனுறுதிமிக்க சந்தைத் துண்டமாக்கலுக்கான தேவைப்பாடுகளை விபரிக்குக.

(ஆ) நிமல் என்பவர் சாதாரணமான ஐந்து பேருந்துகளைப் பயன்படுத்தி பயணிகள் போக்குவரத்துச் சேவை ஒன்றைச் செயற்படுத்துகிறார். வாடிக்கையாளர்களின் திருப்தியை மேலும் அதிகரிக்கச் செய்வது தொடர்பில் நிமல் தனது போக்குவரத்துச் சேவையில் எத்தகைய மேலதிகமான வசதிகளைச் சேர்க்கலாமென நீர் ஆலோசனை செய்வீர்? (04 புள்ளிகள்)

(ii) (அ) முதனிலைப் பொதி, இரண்டாம்நிலைப் பொதி என்றால் என்ன என்பதனை விபரிக்குக.

(ஆ) பொதிசெய்தலினூடாக வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) நிதி முகாமைத்துவத்தின் **நான்கு** முக்கியமான நோக்கங்களைக் குறிப்பிடுக.

(ஆ) நிதித் தீர்மானம் மற்றும் முதலீட்டுத் தீர்மானம் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) யசபால என்பவர் மிளகாய் கறிச்சரக்குகளை அரைத்து, பொதி செய்து, விநியோகிக்கின்ற வணிகம் ஒன்றைத் தொடங்கத் திட்டமிடுகின்றார். அவரது நீண்டகால மற்றும் குறுங்கால நிதித் தேவைப்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** உதாரணங்கள் வீதம் தருக. (04 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(v) (அ) 'ஒதுக்கங்களை மூலதனமாக்கல்' என்பதனால் கருதப்படுவது யாது என்பதை விவரிக்குக.

(ஆ) உற்பத்தி நிறுவனம் ஒன்றினால் சூழல் மாசடைதலைக் குறைப்பதற்கென மேற்கொள்ளக்கூடிய **நான்கு** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**7.** (i) ஒரு நாட்டின் நிதி முறைமையின் **நான்கு** கூறுகளை உதாரணங்களுடன் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) கொழும்பு பங்குச் சந்தையில் ஈடுபடுகின்ற **நான்கு** தரப்பினரைப் பெயரிடுக.

(ஆ) திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) கமல், சரத் ஆகிய இருவரும் விற்பனை முகவர் பதவிக்கான ஒரு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினர். கமல் தரம் 8 வரை மட்டுமே கல்வி கற்றிருந்தார். சரத் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியிருந்த போதிலும் நேர்முகப் பரீட்சையின்போது கமல் குறித்த பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இங்கு கமலின் தெரிவில் தாக்கத்தை ஏற்படுத்திய **நான்கு** காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மனிதவள முகாமைத்துவத் தொழிற்பாடுகள் இரண்டினை அடிப்படையாகக் கொண்ட பின்வரும் அட்டவணையின் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்திலும் ஒரு விடயம் வீதம் குறிப்பிட்டு, அட்டவணையைப் பூரணப்படுத்துக.
(உமது விடைக்கு பின்வரும் மாதிரி அட்டவணையைப் பயன்படுத்துக.)

| தொழிற்பாடுகள் / தரப்பினர் | செயற்றிறன் மதிப்பீடு | | பயிற்சியும் அபிவிருத்தியும் | |
|---|---|---|---|---|
| | அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் | அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
| நிறுவனத்துக்கு | | | | |
| ஊழியர்களுக்கு | | | | |

(04 புள்ளிகள்)

(v) தொழில் வழங்குநர்-தொழில் பெறுநர் ஆகியோருக்கு இடையிலான சிறந்த உறவினைப் பேணுவதனூடாக நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**8.** (i) (அ) அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமானது வணிகங்களுக்குப் பயன்படத்தக்க வகையில் செயற்படக்கூடிய **நான்கு** வழிகளை விளக்குக.

(ஆ) "தரவுகளை விட தகவல்கள் மிகவும் பயனுடையவையாகும்." தரவுகள் மற்றும் தகவல்களை ஒப்பிட்டு இக்கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் அட்டவணையானது தகவல் முறைமைகளின் பயன்பாட்டுத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. (உமது விடைத்தாளில் ①, ②, ③, ④, ⑤, ⑥, ⑦, ⑧ ஆகிய வெற்றிடங்களுக்கான விடைகளை மாத்திரம் எழுதுக.)

| நிறுவன மட்டம் | தகவல் முறைமைகள் | உபயோகத் தேவைப்பாடு | உதாரணங்கள் |
|---|---|---|---|
| செயற்பாட்டு | ① .................... | வழக்கமான வேலைமுறை | ② .................... |
| அறிவு | அலுவலக தன்னியக்கம் | ③ .................... | ④ .................... |
| ⑤ .................... | முகாமை | திட்டமிடலும் கட்டுப்பாடும் | ⑥ .................... |
| தந்திரோபாயம் | ⑦ .................... | ⑧ .................... | முதலீட்டு மதிப்பீடு |

(04 புள்ளிகள்)

(iii) (அ) சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றிற்கான 'போட்டிப் பகுப்பாய்வின்போது' கருத்திற் கொள்ள வேண்டிய **நான்கு** தகவல் உருப்படிகளைக் குறிப்பிடுக.

(ஆ) காசுப் பாய்ச்சற் கூற்றொன்றில் காசு உட்பாய்ச்சலுக்கான **நான்கு** உதாரணங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) 'முறைமை மென்பொருள்' இற்கும் 'பிரயோக மென்பொருள்' இற்கும் இடையிலான வேறுபாட்டை விபரிக்குக.

(ஆ) 'பஸ் வலைப்பின்னல்', 'நட்சத்திர வலைப்பின்னல்' ஆகியவற்றை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்றொன்றில் தேறிய விற்பனையைக் கணிப்பிடுகின்ற முறையை எடுத்துக்காட்டுக.

(ஆ) வணிகமொன்றின் நாளாந்த செயற்பாடுகளுக்கான நிதித் தேவைப்பாடு தொடர்பில் **நான்கு** பிரதான கிரய உருப்படிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk